## போராட்ட வரலாறு — ஆற்ற வேண்டிய கடமைகளை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ மாநாடு சொல்லும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, டிச.29-

போராட்ட வரலாறு மற்றும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை பல்லடத்தில் நடைபெறும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ மாநாடு சொல்லும் என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டு நேற்று (28.12.2025) சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டில் உள்ள நம் சகோதரிகள் அனைவரும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள்தான்! திராவிட இயக்கத்தால் தலைநிமிர்ந்து வெற்றி நடை போடும் போராட்ட வரலாற்றையும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளையும் நாளை (29.12.2025) பல்லடத்தில் நடைபெறும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள் மேற்கு மண்டல @DMK Womens Wing மாநாடு சொல்லும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.12.2025) சென்னை, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் சார்பில் 18.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிராட்வே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை திறந்து வைத்து, மின்விநியோகத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை பிராட்வே, பிரகாசம் சாலையில், சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.1.26 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 128 புதிய மின் விளக்குகளின் பயன்பாட்டை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா, ஜோசப் சாமுல் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சென்னை பிராட்வே, டேவிட்சன் சாலையில்
## ‘வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்’ ரூ. 18.24 கோடியில்

# பிராட்வே 33/11 கி.வோ.துணை மின் நிலையம்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து — மின் விநியோகத்தை தொடங்கி வைத்தார்!

சென்னை,டிச.29-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை பிராட்வே, டேவிட்சன் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில் 18.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிராட்வே 33/11 கி.வோ. துணைமின் நிலையத்தைத் திறந்து வைத்து, மின் விநியோகத்தை தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் அவர்கள் சென்னை முழுவதும் சீரான மற்றும் விரிவான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் வட சென்னை பகுதிகளில் பல்வேறு முக்கியமான திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்காக வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 1034.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 திட்டப்பணிகள் மேற்கொள்ளவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் 1000.39 கோடி ரூபாயும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 33.85 கோடி ரூபாயும் நிதி பங்கீடு செய்து வழங்கியதன் அடிப்படையில், பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை பிராட்வே, டேவிட்சன் சாலையில், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சார்பில் 18.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு நிறுவப்பட்டுள்ள பிராட்வே 33/11 கி. வோ. துணைமின் நிலையத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (28.12.2025) திறந்து வைத்து, மின்விநியோகத்தை தொடங்கி வைத்தார்.

நேற்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்ட புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம், மின்னூட்டம் பெற்று 5 புதிய 11 கி.வோ மின் பாதைகள் வாயிலாக 2X8 எம்.வி.ஏ திறனுடைய மின்மாற்றிகள் மூலமாக மின்சாரம் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலமாக வடசென்னை பகுதியில் குறைந்த மின் அழுத்த குறைபாட்டினை நிவர்த்தி செய்து, தடையற்ற மற்றும் மின்னழுத்த ஏற்ற இறக்கமின்றி சீரான மின் விநியோகம் வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய துணை மின்நிலையம் மூலம் பிராட்வே, மண்ணடி, சவுக்கார்பேட்டை, கொத்தவால் சாவடி, என்.எஸ்.சி போஸ் ரோடு, முத்தையால் பேட்டை மற்றும் ஏழு கிணறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வணிக மற்றும் வீடுகளுக்கான மின்நுகர்வோர்கள் சுமார் பதினைந்தாயிரத்திற்க்கும் மேற்பட்டோர் சீரான மற்றும் தடையற்ற மின்சாரம் பெற்று பயன் அடைவார்கள்.

மேலும், ஏற்கனவே உள்ள கிழக்கு ஜார்ஜ் டவுன், பூக்கடை 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள் மற்றும் உயர்நீதிமன்ற 110 கி.வோ துணை மின் நிலையத்திலும் உள்ள சுமார் 10 எம்.வி.ஏ மின் பளு இன்று முதல் குறைக்கப்பட்டு, இத்துணை மின் நிலையத்தின் வாயிலாக மின் விநியோகம் செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கூடுதல் தலைமைச் செயலாளர் /தமிழ்நாடு மின் பகிர்மான கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொ) மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு மின் பகிர்மான கழக இயக்குநர் (பகிர்மானம்) அ.செல்வகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் — அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு



சென்னை,டிச.29-

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் 29.12.2025 திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் ★சென்னை, ஓட்டேரி,பிரிக்ளின் சாலையில் உள்ள எஸ்.ஆர்.பேலஸில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,இந்நாள்-முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்.. ,பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 312 வது நாள்!

### கொளத்தூர் மேற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,டிச.29-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 312 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (28.12.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 64, 34வது தெரு, GKM காலனி (கட் ரோடு). 2) வட்டம் 66, வேல் முருகன் நகர், திருப்பதி நகர் விரிவு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, P. அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P. ஊமைத்துரை, கே.பி.ஆதவன் மணி, என்.பொன்முடி, கே. ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச் செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# பாடி கைலாசநாதர் திருக்கோயில் - படவேட்டம்மன் திருக்கோயில் திருப்பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை,டிச.29-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (28.12.2025) சென்னை, பாடி, கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் சாலை மட்டத்திலிருந்து தாழ்வாக உள்ள படவட்டம்மன் திருக்கோயிலை உயர்த்திடும் (Lifting) வகையில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்

இந்து சமய அறநிலையத்துறையானது தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்கு நடத்தி வருவதோடு, பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தி வழங்கி வருகின்றது. கடந்த நான்கரை ஆண்டுகளில் சென்னை மண்டலங்களில் ரூ. 86.68 கோடி மதிப்பீட்டில் 323 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 207 திருக்கோயில்களில் குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளன. அதேபோல் சாலை மட்டத்திலிருந்து தாழ்வாக உள்ள திருக்கோயில்களை நவீன தொழில்நுட்ப வசதியுடன் உயர்த்தி (Lifting) அமைக்கும் பணிகள் 25 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் 14 திருக்கோயில்களின் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

சென்னை, பாடியில் அமைந்துள்ள சுமார் 100 ஆண்டுகள் பழமையான கைலாசநாதர் திருக்கோயிலை சாலை மட்டத்திலிருந்து இரண்டரை அடி உயர்த்தி கருங்கல் திருக்கோயிலாக அமைத்தல், சாலக் கோபுரம் அமைத்தல், உப சன்னதிகள், மடப்பள்ளி மற்றும் அலுவலகம் கட்டுதல், புதிய கொடிமரம் நிறுவுதல், வெளிப்பிரகாரம் முழுவதும் கருங்கல் தரைத்தளம் அமைத்தல் போன்ற திருப்பணிகள் ரூ. 3.49 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, அதேபோல், 70 ஆண்டுகள் பழமையான பாடி, எம். டி.எச். சாலையில் அமைந்துள்ள படவேட்டம்மன் திருக்கோயிலானது சாலை மட்டத்தை விட தாழ்வாக அமைந்துள்ளனது. இத்திருக்கோயிலை 5 அடி உயர்த்தும் பணிகள் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருவதோடு, ரூ. 47.75 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு நிலை விமானத்துடன் கருங்கல் கருவறை அமைக்கும் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று (28.12.2025) சென்னை, பாடி கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணிகளையும், படவட்டம்மன் திருக்கோயிலை உயர்த்தும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், இணை ஆணையர் சு.மோகனசுந்தரம், உதவி ஆணையர் கி.பாரதி ராஜா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, மாநகராட்சி உறுப்பினர்கள் திருமதி நாகவள்ளி, டாக்டர் பூர்ணிமா, செயல் அலுவலர்கள் ம.சசிகுமார், செ.மோகன் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

